பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 02 வெள்ளிக்கிழமை 20.10.2023 அதிர்வு 81

## பதுளை பஸ் விபத்தில் வயோதிபப் பெண் பலி

### 25 பேர் காயம்

பதுளையில் இ.போ.ச. பஸ்ஸொன்று விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன், 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 04



## தமிழ்க் கட்சிகளின் ஹர்த்தால் பிசுபிசுப்பு

# கடைகள் மாத்திரம் பூட்டு; பொது முடக்கம் இல்லை!

### வீதிகளில் மக்கள் வழமை போன்று நடமாட்டம்

- நமது நிருபர்கள் -

தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன்று முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த ஹர்த்தால் பிசுபிசுத்தது. பிரதான நகரங்களில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் பொதுச்சேவைகள் இடம்பெற்றன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் வழமை போன்று காணப்பட்டது. 04





## யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று கஜன், சுலக்சனின் நினைவேந்தல்




- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகியோரின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் இன்று நடைபெற்றது. (விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

## வாகன விபத்தில் சிறுவன் மரணம்

### இருவர் படுகாயம்



-ரஸீன் ரஸ்மின்-

கற்பிட்டி – நுரைச்சோலை ஜும்ஆ மஸ்ஜிதுக்கு முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தில் 04

# வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் பிசுபிசுப்பு

## அம்பாறை மாவட்டத்தில்



(படங்கள்:- ஏ.எல்.எம்., பாறுக் ஷிஹான்)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்



(படங்கள்:- க.சரவணன்)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்



(படங்கள்:- சண்முகம் தவசீலன்)

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில்



(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)

## வவுனியா மாவட்டத்தில்



(படங்கள்:- கே.வசந்தரூபன்)

## திருகோணமலை மாவட்டத்தில்



(படங்கள்:- ஹஸ்பர் ஏ ஹலீம்)

## மன்னார் மாவட்டத்தில்



(படங்கள்:- மன்னார் நிருபர்)





# யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று கஜன், சுலக்சனின் நினைவேந்தல்

**- எஸ்.நிதர்ஷன் -**

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகியோரின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்தில் இன்று நடைபெற்றது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கஜன், சுலக்சனின் நினைவுப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சியாகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் நெவில்குமாரினால் நினைவுப் பேருரையும் ஆற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வாகன விபத்தில்...

ஐந்து வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கற்பிட்டி – தலவில பகுதியைச் சேர்ந்தவர்களே இந்த விபத்தில் சிக்கியுள்ளனர் என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு கற்பிட்டி பகுதியிலிருந்து பாலாவியை நோக்கிப் பயணித்த மகேந்திர ரக லொறியும், எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவனின் தாய் தொழில் நிமித்தம் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில், அவர் தனது தந்தையோடு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் உயிரிழந்த ஐந்து வயது சிறுவன் உட்பட மூவர் பயணித்துள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் உட்பட மூவரையும் சிகிச்சைக்காக அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதன்போது, காயமடைந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று புத்தளம் திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிசாம் தெரிவித்தார்.

மேலும், விபத்தில் படுகாயமடைந்த இருவரும் புத்தளம் தள வைத்தியசாலையில் இருந்து, மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று புத்தளம் திடீர் மரண விசாரணை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட இருவரில் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற சாரதி, முறையற்ற வகையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்ற விதம் பற்றி வீதியோரத்திலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி. கமராவிலும் பதிவாகியுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி சுனில் தலைமையிலான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடைகள் மாத்திரம் பூட்டு...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியும், தமிழ்பேசும் மக்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டித்தும் வடக்கு – கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க 8 தமிழ்க் கட்சிகள் கூட்டாக அழைப்பு விடுத்திருந்திருந்தன. எனினும், ஹர்த்தால் போராட்டம் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

வடக்கு – கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரதான நகரங்களில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் சுப்பர்மார்க்கெட்டுகள், பாமசிகள் திறக்கப்பட்டிருந்தன.

வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் வழமை போன்று காணப்பட்டது. அதேவேளை, வீதியோரங்களில் மரக்கறி வியாபாரம் களைகட்டியது. சில இடங்களில் பொதுச்சந்தைகளும் இயங்கின. எரிபொருள் நிலையங்கள் வழமை போன்று திறக்கப்பட்டிருந்தன.

தனியார் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இ.போ.ச. பஸ் சேவைகள் வழமைபோல் இடம்பெற்றன.

பாடசாலைகளில் தவணைப் பரீட்சை இடம்பெற்று வருகின்றமையால் கல்விச் செயற்பாடுகள் வழமை போல் நடைபெற்றன.

வங்கிகள், நிதி நிறுவனங்கள் திறக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான இடங்களில் திரையரங்குகளும் திறக்கப்பட்டிருந்தன. அங்கு மக்கள் குவிந்திருந்தனர்.

இதேவேளை, நீதிமன்றச் செயற்பாடுகளில் இருந்து சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்புச் செய்திருந்தனர்.

## பதுளை பஸ் விபத்தில்...

பதுளையில் இருந்து கெட்டவத்த நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸே, வீதியைவிட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

வயோதிபப் பெண்ணொருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்கள் மீகஹகிவுல வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக 7 பேர் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.








# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சிறப்புற நடைபெற்ற முத்தமிழ் விழா!

(என்.புவியரசன்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் விழா கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் சங்கீத பூஷணம் பூத்தகொடி புகழ் செ. குமாரசாமி அரங்கில் இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நேற்று இடம்பெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவபாலன் குணபாலன் கலந்து கொண்டார்.


துணுக்காய் வலய அழகியல் கல்வி உதவி கல்வி பணிப்பாளர் நாகரட்ணம் இராஜன் சிறப்பு விருந்தினராகவும் ழகரம் அறக்கட்டளை பொ.பிரசாந்தன், குடத்தனை அ. த. க. பாடசாலை ஆசிரியை பாரத் வீணாவாஹினி ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தொடக்கவுரையை முத்தமிழ் மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமாரும் அரங்கத் திறப்புரையை சங்கீத பூஷணம் கே.எஸ். சிவஞானராஜாவும் நிகழ்த்தினர்.

முத்தமிழ் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் நடனம், வில்லிசை, நடகம் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கலாசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டுக் கலாசாலையின் 98– 99 கல்வியாண்டு அணியினரின் ஆதரவில் 25 ரூபா பெறுமதியான முத்திரை மற்றும் அஞ்சல் உறை என்பன வெளியிடப்பட்டன.

வடமாகாண அஞ்சல் அத்தியட்சகர் மதுமதி வசந்தகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.இராஜன், முத்திரை வெளியீட்டு இணைப்பு விரிவுரையாளர் வே. சேந்தன், கலாசாலை அதிபர் ச.லலீசன் ஆகியோர் இதனை வெளியிட்டு வைத்தனர்.






# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு விழிப்புணர்வுச் செயலமர்வு





(நூருல் ஹுதா உமர் )

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கு மற்றும் ஆரோக்கிய உணவு பழக்கம் பற்றிய விழிப்புணர்வு செயலமர்வு செவ்வாய்க்கிழமை (17) சமுர்த்தி வங்கிச் சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம் ஆகியோரின் வழிகாட்டலில் சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர் ஒருங்கிணைப்பில் சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்றது.

இதில் வளவாளர்களாக காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரியும், சாய்ந்தமருது பதில் சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் தஸ்லிமா பஷீர், கல்முனை சுகாதார சேவைகள் பணிமனை டாக்டர் எம்.என். எம். தில்சாத் கலந்து கொண்டு விரிவுரையாற்றினர்.

இந்நிகழ்வில் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றியாபா, சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீன் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முடக்கக் கோரிக்கை முடங்கியது

தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாக அறிவித்த பொதுமுடக்கம் - கடையடைப்பு - திருவிழா ஒருவாறு முடிவுக்கு வந்துவிட்டது.

அதன் ஏற்பாட்டாளர்களில் முக்கியமானவரான ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கூறியமை போல இந்த வரிசையில் இது கடைசி ஹர்த்தாலாக இருக்குமா? தெரியவில்லை. இதே போன்ற கூத்தை நமது தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் அவ்வளவு விரைவில் கைவிட்டு - அதை முடிவுக்கு கொண்டுவரும் விவேகிகள் அல்லர். அல்லது மக்களின் விவேகத்தை புரிந்து கொண்டு அர்த்தமற்ற இத்தகைய போராட்ட வழிமுறைகளை அவ்வளவு விரைவில் கைவிடும் புத்திசாலிகளாக அவர்கள் இருப்பார்கள் என்று நம்புவதற்கும் இடமில்லை.

தமிழ்க் கட்சிகள் கேட்டுக்கொண்டமை போல கடைகள் மூடப்பட்டன. சந்தைகள் இயங்கவில்லை. தனியார் பஸ்கள் ஓடவில்லை. ஆக, வடக்கில் கடையடைப்பு நடந்தது. ஆனால், பொது முடக்கம் சரிவரவில்லை என்பதுதான் நிலைமை.

பாடசாலைகள் இயங்கின அல்லது இயங்க வைக்கப்பட்டன. பரீட்சைகள் நடந்தன. அரச பஸ்கள் ஓடின. வங்கிகள், அரச அலுவலகங்கள் இயங்கின. ஓட்டோக்கள், மக்களின் இரு சில்லு வாகனங்கள், கார்கள் வீதிகளில் தாராளமாக ஓடித்திரிந்தன. மக்களின் போக்குவரத்து வீதிகளில் தாராளமாக நடந்தது. படக் காட்சிகள் இடம் பெற்றன. மக்கள் வீடுகளுக்குள் முடங்கினர் என்று கூறுவதற்கு இடமில்லை.

கிழக்கில் கடையடைப்பு, பொதுமுடக்கம் இரண்டுமே சரிவரவில்லை.

எனினும், இந்தப் பொதுமுடக்கம் - கடையடைப்பு - ஹர்த்தால் - பெருவெற்றி என்று தமிழ் தேசிய கட்சிகள் முழங்கும். அதற்கு ஒத்துழைத்த தமிழ் மக்களுக்கு நன்றி என்று அவை கயிறு விடும். அதுதான் அவர்கள் அரசியல். விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று அவை காட்டித்தானாக வேண்டும். வேறு வழியில்லை.

வடக்கு வர்த்தகர்கள் கடைகளை மூடினார்கள் என்றால், தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்தப் போராட்டத்திற்கு முழு ஆதரவு தந்து, அது தொடர்பான கோரிக்கை எழுச்சி பெற வேண்டும் என்பதற்காகவல்ல. தமிழ்த் தேசியத்தின் பெயரால் ஒரு போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது, அதை நாம் எதிர்த்துச் செயற்பட்டோம் என்ற மனப்பதிவு வரக்கூடாது, ஆகவே கடைகளைப் பூட்டுவோம் என்ற கருத்தியலில்தான்.

யாழ். வணிகர் கழகம் இந்தக் கடையடைப்பைத் தான் எதிர்ப்பதில்லை என்று கூறி ஆதரவு தருவதாகக் காட்டியதும் -

மற்றைய ஆறு கட்சிகளின் கடையடைப்புப் போராட்டத்திற்கு தாங்களும் ஆதரவு என்ற நிலைப்பாட்டை இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுத்ததும் -

கூட, இத்தகைய காரணத்தினால்தான். தமிழ் தேசியம் ஒன்றின் பெயரால் அழைப்புவிடுக்கப்பட்டிருக்கும்போது, அதை எதிர்த்து, ஆட்சேபித்துச் செயல்பட்டோம் என்ற வரலாற்றுப் பழி - தவறு - தம் மீது விழுந்து விடாமல் தவிர்த்துக் கொள்ளும் அவசியம் கருதித்தான்.

இன்றைய போராட்டத்திற்கு அழைப்பு விட்டவர்கள், இந்தக் களப்புற யதார்த்தத்தில் பொதிந்துள்ள உண்மைகளை இனியாவது புரிந்து கொண்டால் சரி. போராட்டத்தை முன்னெடுப்பதற்கான தயார் நிலையில் மக்களைக் கொண்டுவரும் விதத்தில் முதலில் தாங்கள் செயற்பட வேண்டும் என்பதை தமிழ்க் கட்சிகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

# கல்முனையில் நாளை இரத்ததானம்

(எம். என்.எம்.அப்ராஸ்)




கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்திய சாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முகமாக கல்முனை கல்வி,கலாச்சார மேம்பாட்டு தாபனத்தின் எக்டோ நூலகம் 20 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு 02 ஆவது தடவையாக இரத்ததான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

நாளை சனிக்கிழமையன்று பள்ளி ஒழுங்கை, கல்முனை-09 இல் அமைந்துள்ள நு நூலகத்தில் காலை 8 மணியிலிருந்து மாலை 4 மணிவரை இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

மனித உயிர் காக்கும் இரத்தான முகாமில் ஆண் மற்றும் பெண் இருபாலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முன்வருமாறு அனைவரையும் ஏற்பாட்டு குழுவினர் அழைக்கின்றனர்.

இரத்தானம் மேற்கொள்ளவுள்ள போக்குவரத்து சிரமமுள்ளவர்களுக்கு போக்குவரத்துக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்பாட்டுக்குழுவின் தொலைபேசி இலக்கங்களான 0672225577, 0771374236, 0774072412 ஆகிய வற்றுக்கு அழைத்து இரத்த தானம் தொடர்பிலான தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

# சாய்ந்தமருதில் பட்டம் விடும் நிகழ்வு

(அஸ்ஹர் ஆதம்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டம் விடுதல் நிகழ்வு நேற்று சாய்ந்தமருது கடற்கரைப் பிரதேசத்தில் இடம் பெற்றது.

இதில் திறமைகளை வெளிக்காட்டி சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா மகா வித்தியாலய மாணவர்களுக்கு நிகழ்வில் அதிதியாகக்கலந்து கொண்ட பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பரிசில்களை வழங்கி வைத்தார்.

இதில் றியாழுல் ஜன்னா மகா வித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# மகசீன்கள், தோட்டாக்களுடன் ரம்புக்கனையில் பிக்கு கைது!

ரம்புக்கனை பகுதியில் உள்ள விகாரை ஒன்றில் வசித்துவரும் பௌத்த பிக்கு ஒருவர் மகசீன்கள் (2 ரி-56) மற்றும் 161 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்தேக நபரை நேற்று (19) ரம்புக்கனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் ஹொரண பௌத்த பல்கலைக் கழகத்தில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் பிக்கு என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.



சந்தேகத்துக்கு உரிய மாணவ பிக்கு வசிக்கும் விகாரையின் விகாரை மடாதிபதி வழங்கிய அறிவித்தலின் அடிப்படையில் பொலிஸ் குழுவொன்று அங்கு சென்று இரண்டு மகசீன்கள் மற்றும் தோட்டாக்களுடன் மாணவ பிக்குவைக் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 850 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில், விகாரை வசித்துவந்த மற்றுமொரு பௌத்த பிக்குவும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 3 பில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது!

## சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி விரைவில் கிடைக்கும்

இலங்கைக்கான 3 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் முதலாவது மீளாய்வு தொடர்பான பணியாளர் மட்ட உடன்பாட்டை சர்வதேச நாணய நிதியமும் இலங்கையும் எட்டியுள்ளன.

இந்த உடன்பாடு, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து, 330 மில்லியன் டொலரை, இரண்டாவது தவணையின் அடிப்படையில், இலங்கை பெற்றுக் கொள்ள உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான அனுமதியைச் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை விரைவில் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அனுமதியானது, இலங்கை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முன்னைய நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதையும், கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள கணிசமான முன்னேற்றத்தையும் சார்ந்துள்ளது.

இதேவேளை கடந்த ஜூன் மாத இறுதிப் பகுதிவரை திட்டத்தின் செயல்திறன் திருப்திகரமாக இருந்தது, அனைத்து அளவு செயல்திறன் அளவு கோல்களும் பூர்த்தி செய்யப்பட்டன.

நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளில் வரி வருவாயைத் தவிர அனைத்துக் குறிப்பான இலக்குகளும் எட்டப்பட்டன என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுவத் தலைவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு இன்று முதல் நடைமுறைக்கு!

இன்று முதல் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 18 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மின்சாரக் கட்டணத்தைப் பயன்படுத்தும் அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டணம் எவ்வாறு அதிகரிக்கப்படும் என்பது இன்று பிற்பகல் வேளையில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணங்களின் சதவீத அதிகரிப்பு தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# மின்சாரக் கட்டணம் அதிகரிப்பால் பேக்கரி உற்பத்தி விலை உயரும்!

மின்சாரக் கட்டண அதிகரிப்பால் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலை அதிகரிக்கலாம் என்று அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தீர்மானத்துக்கு வந்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் தலைவர் திரு.ஹர்ஷன ருக்ஸான் இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இன்று முதல் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



இதன்படி, 18 சதவீதத்தால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மின்சாரக் கட்டணத்தைப் பயன்படுத்தும் அலகுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டணம் எவ்வாறு அதிகரிக்கப்படும் என்பது இன்று பிற்பகல் வேளையில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்தியக் கடற்படையினரின் ஹெலிக்கொப்டர் இலங்கைக்கு

## துணை விமானிகள் பயிற்சிகளுக்காக வந்தது

இலங்கை விமானப் படையினரின் துணை விமானிகள் பயிற்சிகளுக்காக இந்தியக் கடற்படையின் அதி நவீன இலகு ரக ஹெலிக்கொப்டர் இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்தக் ஹெலிக்கொப்டர் நேற்றுக் (19) கட்டுநாயக்கவிலுள்ள இலங்கை விமானப் படைத் தளத்தில் தரயிறங்கியுள்ளது.

இலங்கை விமானப்படை விமானிகள், நடைபெறவுள்ள பயிற்சிகளின் மூலமாக அதி நவீன இலகு ரக ஹெலிகொப்டர்களை கையாளும் வாய்ப்புகளுடன் துணை விமானி அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது.

இலங்கைக் கடற்படைக் கப்பல்களில் தரையிறங்கும் பயிற்சிகளை முன்னெடுப்பதற்கும் இந்த பயிற்சி அணியினர் திட்டமிட்டுள்ளதோடு, அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் ஒரு பகுதியாக இந்திய அரசால் முன்னெடுக்கப்படும் அயல் நாடுகளின் திறன்விருத்தி செயற்பாட்டுத் திட்டத்தின் ஓரங்கமாக இந்தப் பயிற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

இலங்கை கடற்படையினருக்கான கப்பலில் விமானங்களை தரையிறக்குதல் மற்றும் இலங்கை விமானப் படையினருக்கான துணை விமானி அனுபவங்கள் ஆகிய பயிற்சிகளை வழங்குவதற்காக 2022 மார்ச் முதல் இலங்கையில் அதிநவீன இலகு ரக ஹெலிகொப்டர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# இராமுப்பிள்ளை வித்தி. மாணவருக்கு கோப்பாய் கலாசாலையில் கௌரவம்!

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கலாசாலையின் நூற்றாண்டு விழாவில் கலாசாலையின் முன்னோடிகளாகக் கொள்ளப்படும் சேர் பொன்னம்பலம் இராமநாதன், காரைநகர் அருணாசலம் உபாத்தியாயர், கோப்பாய் சுவாமிநாதன், அதிபர் பொன்னையா போன்ற பதினெட்டு பெருந்தகைகளது வேடங்களை தாங்கிக் கலந்து சிறப்பித்தமைக்காக இவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்வை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 98-99 அணியினர் நேற்று (19)முன்னெடுத்தனர்.

பாடசாலை அதிபர் சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத் தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவபாலன் குணபாலன் கலந்து சிறப்பித்தார்.

ஆசிரிய கலாசாலை அதிபர் ச லலீசன், பிரதி அதிபர் க. செந்தில்குமரன், ஒட்டி சுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி. நாகேந்திரராஜா மற்றும் கலாசாலை சமூகத்தினர் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# தனது கஜானவை நிரப்புவதற்கே டக்ளஸ் அமைச்சராக உள்ளார்!

## அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்புத் தேசிய அமைப்பாளர் சுப்பிரமணியம்

தனது கஜானவை நிரப்பவே டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்து கடற்றொழில் அமைச்சராகச் செயற்படுகின்றார் என்று அகில இலங்கை தொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்புத் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்–




எமது நாட்டில் கடற்தொழில் சம்மந்தமான சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத் திருத்தத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கபட்டுள்ளது. சட்டத் திருத்த மூலம் தொடர்பாக மக்களை ஏமாற்றும் விதமாக ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடற்றொழிலுக்கு சம்பந்தமில்லாதவர்கள் ஒரு கட்சியின் பிரதிநிதிகள் குறித்த கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்தச் சட்டம் , 1996 ஆம் ஆண்டு பல மீனவர் நலன்களை முன்வைத்த பொழுதிலும் அதனை எல்லாம் புறக்கணித்துக் கொண்டு வரப்பட்டது. தொழிலாளர்களுக்குப் பாரிய ஏமாற்றத்தை கொடுத்தது.

பணிப்பாளர் அங்கீகாரம் பெற்றவர்கள் அமைச்சரால் அடையாளப்படுத்தபட்ட இடத்தில் மாத்திரம் தொழில் மேற்கொள்ளல் என்பன இதன் மூலம் பாதிப்பை ஏற்படுத்துகிறது. வெளிநாட்டு மீனவர்களையும் இதன் மூலம் தொழிலுக்குள் அனுமதிக்கலாம்.

ஆகவே இதனை விடுத்து ஏற்கனவே 1996 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தைத் திருத்தி 2017 ஆம் ஆண்டு இழுவை மடிச் சட்டத்தையும் உள்ளீர்த்து மீனவ நலனை பேணும் ஆக்க பூர்வமான சட்டமாக இதனை மாற்றவேண்டும்.

தற்பொழுது இந்தியாவுக்குப் பேச்சுக்குச் செல்வதற்காக உண்டியலில் சிலர் பணம் திரட்டுகின்றனர்.

இதனை இரண்டு விதமாகப் பார்க்கலாம். மீனவர்கள் பிச்சை எடுக் கின்றார்கள், பிச்சை எடுத்துத்தான் இந்தியாவுக்குப் பேச்சுக்குச் சொல்லுகின் றார்கள் என்று கருத்துக் கொள்ளலாம்.

அரசு 2016 ஆம் ஆண்டு பேச்சு நடத்தியிருந்து .இதன் மூலம் இணக்கப்பாட்டையும் எட்டியிருந்தது. இருப்பினும் தற்பொழுது அரசியல் இலாபத்துக்காகத் தொடர்ந்து இவ்வாறான பேச்சு மாய வலைகளை உருவாக்குவதை நாம் வண்மையாக கண்டிக்கின்றோம்.

கடற்றொழில் அமைச்சர் தொடர்ச்சியாக தான்தோன்றிதனமாக செயற்படுகின்றார். அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவகையில் இவர் செயற்படவில்லை. இந்தப் பேச்சு கடற்றொழில் அமைச்சரின் கபட நாடகமே.

அண்மையில் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டிருந்தார்கள். இதனை வைத்து பார்க்கும் பொழுது மாபெரும் சக்தி ஒன்று இதன் பின்னால் செயற்பட்டுள்ளமை தெரிகிறது. இதன் மூலம் இந்தியாவில் போராட்டம் வெடித்துள்ளது. யாராக இருந்தாலும் பாதிக்கப்பட்ட மீனவருக்கு எமது மனவருத்தத்தை தெரிவிக்கின்றோம்.

மஹிந்த காலத்தில் கடலோர கிராம மீனவர்கள் புறக்கணிக்கப்பட்டு சீன நிறுவனத்துக்குக் கடல் வளங்கள் பகிரப்பட்டன. இதற்கு மஹிந்தவுடன் ஒட்டிக் கொண்டிருந்த தமிழ் அமைச்சரும் உடந்தை என்பதை அறிய முடிந்தது. இன்றும் மொட்டு ரணில் கூட்டணியிலும் அவ்வாறே இடம்பெறுகின்றது.

அரசுடன் ஒட்டியிருக்கும் டக்ளஸ் தேவானந்தாவை அரசால் வெளியேற்ற முடியவில்லை.

தொல்பொருள் சரணாலயம் என்று பல்வேறு காரணங்களைக் கூறி மீனவர்களை அந்நியபடுத்தும் செயல் இருந்தது. கடற்றொழிலாளர்களது தொழிலை மாற்ற வைத்து கடல் வளத்தை கைப்பற்றி பண்ணையை மேம்படுத்தும் திட்டங்களை டக்ளஸ் முன்னெடுத்துள்ளார்.

தனது பினாமிகளை வைத்து இந்தத் தொழிலை முன்னெடுத்து தனது கஜானாவையும் நிரப்பி தனக்கு ஆதரவாக ஆள்களையும் திரட்டுகின்றார்.

இந்திய இழுவைமடி பிரச்சினையைத் தீரவிடாது வைத்திருப்பதன் டக்ளஸ் நோக்கமும் இதுதான். இலங்கை – இந்திய பிரச்சனையைப் பெருக்கி ஈழ மக்கள் கடற்றொழிலை கைவிட வைப்பதே இவரது நோக்கமாக இருக்கின்றது .

பெரும்பான்மைக் கட்சியின் பிரதமர் இந்தியாவில் கூறுகிறார், இந்திய மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிப்பேன் என்று. ஆனால் அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் அமைச்சர் டக்ளஸ், தான் விடமாட்டேன் என்கிறார். அமைச்சர் காலத்துக்குக் காலம் நேரத்துக்கு நேரம் தாளத்தை மாற்றுவார். நாம் அவதானமாக இருக்கவேண்டும்.

தற்பொழுது மீனவர் பொருளாதார வலயமும் அந்நிய சக்திகளை நாட்டுக்குள் ஊடுருவுவதையே அடிப்படையாக கொண்டமைந்துள்ளது.

எனவே வடபுலத்து மீனவர்கள் நாம் எமது கடல் வளம் பறிபோகும் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக நிச்சயமாகக் கிளர்ந்து எழுவோம்.– என்றார்.

# நாட்டைவிட்டு வெளியேறிவரும் தாதியர்: திண்டாடும் பிரபல வைத்தியசாலைகள்!

நாட்டை விட்டு 372 தாதியர்கள் வெளியேறியுள்ள நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டில் மேலும் 400-500 தாதியர்கள் நாட்டை விட்டு வெளியேற வாய்ப்புள்ளது என்றும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தேசிய வைத்தியசாலையின் தாதியர்களின் எண்ணிக்கை சுமார் 12 விதம் குறைந்துள்ளது. தற்போது தேசிய வைத்தியசாலையில் சுமார் 2400 தாதி உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் ஒரு நோயாளிக்கு ஒரு தாதி இருக்க வேண்டும் என்பது பொதுவான விடயமாக இருந்தாலும், தற்போது இரண்டு நோயாளர்களுக்கு ஒரு தாதி மட்டுமே உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாதியர் பற்றாக்குறை நிலவுவதால் வைத்தியசாலையிலுல்ல திணைக்களங்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றன என்றும் கூறப்படுகிறது.



# பிரவுன்லோ முத்துமாரியம்மன் ஆலய நிர்வாகத் தெரிவுக்கு இரகசிய வாக்கெடுப்பு

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பிரவுன்லோ ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய நிர்வாக சபையை இரகசிய வாக்குகெடுப்பு மூலம் ஒவ்வொரு மூன்று வருடங்கள் முடிந்த பின்பும் யாப்பின் அடிப்படையில் தெரிவு செய்வது வழமை.



அந்த அடிப்படையில் கடந்த 15 ஆம் திகதி சிறப்பாக அனைத்து பொது மக்களின் ஒத்துழைப்புடன் தெரிவு இடம் பெற்றது.

இதற்கான தேர்வுத் தேர்தலை மேற்பார்வை செய்ய கண்காணிக்க மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளர் ராஜவீரன், நோர்வூட் பிரதேஷ செயலக இந்து சமயத்திக்கு பொறுப்பான உத்தியோகஸ்த்தர் திருமதி. கல்பனா, கிராம சேவகர் திரு. குணதிலக்க, மஸ்கெலியா உதவி பொலிஸ் பொறுப்பு அதிகாரி திரு. செனவிரத்ன, அபிவிருத்தி உத்தியோகத்தர் ரூபன், கலாநிதி சதாசிவம், சமாதான நீதிவான் உதயகுமார், சமாதான நீதிவான் மோகனராஜ் மற்றும் பிரவுன்லோ 320 என் பொலிஸ் பொறுப்பு அதிகாரி விக்னேஸ்ராஜ் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

பொது மக்கள் அனைவரும் சிறந்த முறையில் ஒத்துழைப்பை வழங்கி, பிரவுன்லோ தேர்தல் குழு நேர்த்தியாகவும், நேர்மையாகவும் நடத்திக் கொடுத்தனர்.





# மன்னார் வலயத்தில் திறன்வகுப்பறை; ஒரே தடவையில் 12 பாடசாலைகளில் !

மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் கி.தே.தேவராஜாவின் பணிக் காலத்தில் மன்னார் கல்வி வலயம் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருகிறது.

டிஜிட்டல் தொழில் நுட்பத்துடனான அவரது கரிசனை, திறன்பலகை பயன்பாட்டின் ஊடாக ஆசிரியர், மாணவர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பாரிய மாற்றத்தினூடான வளர்ச்சியை கண்டு வருகின்றது.

அவரது பெருமுயற்சியின் பயனாக ஒரேதடவையில் பன்னிரண்டு பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை சிறந்த ஒரு செயற்பாடாக அனைவரினதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு மற்றும் இரட்ணம் பவுண்டேசன் ஆகியவற்றின் நிதியில் பத்து பாடசாலைகளிலும் வன்னி ஹோப் அமைப்பின் நிதியில் இரு பாடசாலைகளிலும் இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# சாலை விபத்து ஓர் உயிர் கொல்லி...!

உலகளாவிய ரீதியில் இன்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கியமான ஒன்றாகச் சாலை விபத்து காணப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் வீதி விபத்துக்களால் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் பொருட்சேதங்களின் அளவும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது. தினம் தோறும் பத்திரிகைகளிலோ அல்லது இணையதள பக்கங்களிலோ நாம் வாசிக்கும் போது சாலை விபத்து தொடர்பான அதிகளவு செய்தியைஅன்றாடம் பார்க்கக் கூடியதாக உள்ளது. பச்சிளம் பாலகன் முதல் வயோதிபர்வரை சாலை விபத்தில் சிக்கி உயிர் இழக்கின்றனர்.

இன்று சாலை விபத்தில் உயிரிழப்போரின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வாகனங்கள் வாகனங்களுடன் மோதுவதாலும் அல்லது வாகனங்கள் கட்டடங்களுடன் மோதுவதனாலோ இவ்வாறான சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதிகரித்த வாகனங்களின் பயன்பாடும் சனத்தொகை அதிகரிப்புமே சாலை விபத்துக்குப் பிரதான காரணமாக காணப்படுகின்றது.

சாலை விபத்துக்கள் ஏற்படுவதற்கு இயற்கையான காரணங்களே அதிகளவு காணப்படுகின்றன. சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்பட காரணம் ஓட்டுநர்களின் கவனக் குறைவாகும்.

தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனத்தை ஓட்டுவதாலும், நித்திரைத் தூக்கத்தில் வாகனம் ஓட்டுவதாலும், வாகனங்களின் பாகங்கள் சரியாக உள்ளனவா என்பதை கவனிக்காமல் வாகனம் ஓட்டுவதாலும், வாகனங்களில் செல்லும்போது அதிகளவு சத்தமாகப் பாட்டுப் போடுவதாலும், தேவை இல்லாத நேரத்தில் ஒலி எழுப்புவதாலும் இவ்வாறான சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இது தவிர வாகன ஓட்டுநர்கள் ஏனைய வாகனங்களோடு போட்டி போட்டு, வேகக்கட்டுப்பாட்டு வரம்பை மீறி வாகனங்களை ஓட்டுவதாலும் நாளாந்தம் ஏராளமான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அது மட்டுமன்றிச் சாலையில் தாறுமாறாக வாகனங்களைச் செலுத்துவதாலும் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதிகளவு மழை காலங்களில் வேகக் கட்டுப்பாட்டை மீறி வாகனங்களை செலுத்தும் போது வாகன ரயரின் தேய்வு காரணமாக வாகனங்கள் சறுக்கி விபத்துக்கள் ஏற்பட நேரும்.

மழைக் காலத்தில் பள்ளங்களில் நீர் தேங்கி இருப்பதால் மேடு பள்ளம் எனப் பாராது வாகனங்களை ஓட்டுவதால் சாலை விபத்துக்கள் ஏற்பட நேருகின்றன. முறையான சாலை ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்காமையாலும் குறிப்பாக வீதிச் சமிஞ்சை விளக்குகளை அவதானிக்காமல் போக்குவரத்து செய்வதாலும் சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பெருநகரப் பிரதேசங்களில் சாலை விபத்து என்பது பாரியதொரு பிரச்சினையாகவும் சவாலாகவும் மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இவ்வாறு பெருநகரப் பகுதிகளில் சாலை விபத்து ஏற்பட காரணம் புதிய சாலைகள் காணப்படுவது அதிகளவு சன நெரிசலும் இதற்குக் காரணமாகின்றது. இவ்வாறான சாலை விபத்து அதிகமான உயிர்களை காவு கொள்கிறது.

வாகனங்களைச் செலுத்தும் போது, குறிப்பாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தும் போது தலைக்கவசம் அணியாது செல்வதாலும் விபத்து ஏற்படும் போது உயிர் மாய்ந்து போகும் சம்பவங்கள் அதிகம் காணப்படுகின்றன. இவற்றோடு புதிய வாகனங்களை அனுபவம் அற்றவர்கள் இயக்கும் சூழ்நிலைகளில் கையாளத் தெரியாததாலும் சாலை விபத்துக்கள் இடம்பெற நேரிடுகின்றது.

சாலை விபத்துக்கள் இவ்வாறு ஏற்படுவதை நாம் எவ்வாறு தவிர்க்கலாம் என்று நோக்கும் போது முதலில் தரைவழிப் பாதைகள் முறையாக அமைக்கப்பட வேண்டும்.

அத்தோடு வீதியில் காணப்படும் இறந்த விலங்குகளின் உடல்கள் மற்றும் தேவையற்ற பொருள்கள் இருப்பின் அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும். வாகன ஓட்டுநர்கள் கவனமாக வாகனத்தை செலுத்த வேண்டும். வாகனத்தைச் செலுத்தும் போது மதுபாவனை, கையடக்க தொலைபேசி என்பவற்றை பயன்படுத்தக் கூடாது. வாகனங்கள் வேகமாக ஓடுவதையும் தவிர்க்க வேண்டும். குறிப்பாக "வாகனங்களின் வேக கட்டுப்பாட்டை குறைப்பால் 35 சதவீதம் வீதி விபத்துக்களை குறைவடையச் செய்யலாம் என வழக்கறிஞர் ஏ.எஸ்.பிலாஸ் கூறுகின்றார்".

வாகனத்தை செலுத்த ஆரம்பிக்கும் போது வாகன ஓட்டுநர்கள் வாகனங்களின் பாகங்கள் சரியாக செயற்படுகின்றனவா என அவதானித்த பின்னரே வாகனங்களை இயக்க வேண்டும். வாகனங்களை செலுத்தும் போது வீதி விதிமுறைகளை சரியாக கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு முறையாக கடைப்பிடிக்காத பட்சத்தில் வீதி விதிகளை மீறி செயற்படுவோருக்கு கடுமையான தண்டனையையும் வழங்க வேண்டும். இவ்வாறு மக்கள் செயற்படுவதன் மூலம் வீதி விபத்துகளை குறைக்கலாம்.

சாலை விபத்து ஏற்படுவதை ஒருவர் கண்காணித்துக் கொண்டு நிற்கின்றார் எனின் அவர் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்வதன் மூலம் சாலை விபத்துக்கள் மூலம் ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

குறிப்பாக சாலையில் விபத்து ஏற்படுவதை நீங்கள் அவதானித்தால் அந்தப் பாதையில் வரும் ஏனைய வாகனங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உடனடியாக எச்சரிக்கை வழங்க வேண்டும். அத்தோடு சாலை விபத்து நடந்த இடத்தைப் பற்றிய முழுத் தகவலையும் உடனடியாகப் பொலிஸாருக்கும் அருகில் உள்ள மருத்துவமனைக்கும் தெரிவிக்க வேண்டும்.

அது மட்டுமின்றி விபத்துக்கு உள்ளாகியவரை எந்த நிலையிலும் தனியே விட்டுவிட்டு செல்லாது அவருடன்

**(12ஆம் பக்கம் பார்க்க)**

# சாலை விபத்து...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து அவருக்குரிய முதலுதவிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இதன் மூலம் சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைக்க முடியும். இவ்வாறு சாலை விபத்து ஏற்படும்போது நாம் ஒவ்வொருவரும் இவ்வாறான செயற்பாடுகளை செய்வோமானால் ஒவ்வொரு உயிர்களையும் நம்மால் காப்பாற்ற முடியும்.

சாலையில் விபத்து ஏற்படுவதை தவிர்க்க வேண்டும் எனில் வீதி விபத்துக்களை நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். அந்த வகையில் வீதி விதிகளை கடைபிடிக்கும் போது சாலை விபத்துகளை தடுக்க முடியும்.

இவ்வாறான வீதி விதிமுறைகளை பார்க்கும்போது வாகனத்தை செலுத்தும் போது கையடக்க தொலைபேசி பாவிக்க கூடாது, மது அருந்திவிட்டு வாகனத்தை இயக்கக் கூடாது, வேக கட்டுப்பாட்டை கவனத்தில் கொள்ள வேண்டும், நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் ஓட்டுநர் வார்ப்பட்டை(ளநயவ டிநடவ) அணிய வேண்டும், இரண்டு சக்கர வாகனத்தில் செல்வோர் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். பாதசாரிகள் மஞ்சக் கோட்டு கடவையால் பீதியை கடக்க வேண்டும். 18 வயதுக்கு குறைந்தோர் தங்களை ஓட்டக் கூடாது. வாகனங்களை ஓட்டும்போது போக்குவரத்து சைகைகளைச் சரியாக கடைப்பிடிக்க வேண்டும் இது போன்ற வீதி விதிமுறைகளை கடைபிடிக்கும் போது சாலை விபத்துகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சாலை பாதுகாப்பில் உள்ள முக்கிய விதிகளையும் வாகன ஓட்டுநர்கள் சரியாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். இதன் மூலமும் சாலை விபத்துக்களை தவிர்க்க முடியும். குறிப்பாக வாகனங்களை ஓட்டுநர்கள் சாலையின் இடது பக்கத்தில் செலுத்த வேண்டும். வாகனங்களை முந்திச் செல்வதை தவிர்த்தல், பாதசாரி கடவைகளுக்கு முன் வாகனத்தின் வேகத்தை குறைத்தல், தீயணைப்பு வாகனம், அவசர ஊர்தி, அம்புலன்ஸ் வண்டி போன்றவற்றுக்கு வழி விடுதல், திருப்பும் அடையாளம் உள்ள இடத்தில் மட்டும் வாகனங்களை திருப்புதல், வலது பக்கமாகவோ அல்லது இடது பக்கமாகவோ வாகனத்தை செலுத்தும் போது சைகை காட்ட வேண்டும், வாகன ஓட்டுநர் தேவையில்லாமல் ஒலிப்பானை பயன்படுத்தக் கூடாது என இதுபோன்ற சாலை விதிகளைக் கடைபிடிப்பதன் மூலம் சாலை விபத்தை தவிர்த்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

சாலை விபத்து பற்றிய விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் மேற்கொள்ளும் விழிப்புணர்வு தகவல்களை மக்கள் அறிந்து அதற்கு ஏற்ப செயற்படுவதால் சாலை விபத்துக்களை இயங்கலை தவிர்க்க முடியும்.

உதாரணமாக நீண்ட தூரம் வாகனங்களைத் தொடர்ந்து செலுத்துவதைத் தவிர்த்தல், எதிரே வரும் வாகனத்துக்கு ஏற்ற வகையில் நாம் வாகனத்தை செலுத்தல், வாகன அனுமதி பாத்தரத்தின் முக்கியத்துவத்தை மக்கள் மத்தியில் பரப்புதல், வாகனங்கள் போட்டிக்கு செல்வதனால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்து இயம்புதல் போன்ற விழிப்புணர்வு தகவலை மக்களுக்கு வழங்குவதால் சாலை விபத்துக்கள் ஏற்படுவதை எம்மால் தவிர்க்க முடியும்.

மனிதர்களாகிய நாம் அனைவரும் சிந்தித்து ஒன்று இணைந்து ஒற்றுமையாக செயல்படுவோமாக இருந்தால் இவ்வாறான சாலை விபத்துகளால் ஏற்படும் உயிர் இழப்புகளையும் பொருள் சேதங்களையும் இயன்றளவு குறைத்துக் கொள்ள முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**சு. திலேஜா,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

# சைவப்புலவர் என்பதற்கு பேரடையாளம் செல்லத்துரை ஐயா

(சைவப்புலவர் சு.செல்லத்துரை ஐயாவின் நினைவு தினம் நாளை 21 ஆம் திகதியாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம்)

சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கருதி அவற்றுக்காகத் தனது வாழ்நாள் முழுவதையுமே அர்ப்பணித்த சைவப்புலவர் சு.செல்லத்துரை ஐயாவின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் நாளையாகும்.

எண்ணம், செயல், தோற்றம், நடத்தை எல்லாவற்றிலும் தூய சைவத்தன்மையை வெளிப்படுத்தி எல்லோருக்கும் குருவாக இருந்து நல்வழிகாட்டியவர் இவராவார்.

எமது சைவப்புலவர் சங்கத்தில் மிக நீண்ட காலம் நிர்வாகசபை உறுப்பினராய், செயலாளராய்,தேர்வுச் செயலாளராய், உப தலைவர் என பல நிலைகளிலும் விளங்கி தனது இறுதி மூச்சுவரை சங்கத்துக்காகவே செயற்பட்டு வந்தவர்.

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவது இழுக்கு” என்று எப்போதும் கூறுவார்.அதற்கேற்ப எதனையும் தூர நோக்கோடு ஆழமாக சிந்தித்து செயற்படும் ஞான சிருஷ்டி உடையவர்.

எமக்கெல்லாம் குருவாய் விளங்கி பல வகைகளிலும் வழிகாட்டி, சைவப்புலவர் சங்கத்தை திறம்பட கொண்டு நடத்துவதற்கான துணிவைத் தந்து



ஆசிர்வதித்தவர்.

சைவப்புலவர் என்பதற்கு பேரடையாளமாக விளங்கியவர். சைவசித்தாந்த வாழ்க்கை வாழ்ந்து பலருக்கும் அதனை எடுத்துக் கூறி அதன்படி வாழ வழி வகுத்தவர்.

செல்லத்துரை ஐயா ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றிப் பல நன் மாணவர்களை உருவாக்கி மிளிரச் செய்தவர். நாடகக்கலை, கூத்துக்கலை ஈழத் திருநாட்டில் வளர அயராது உழைத்தவர்.

இவர் உரை நாடகங்கள், இசை நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், சிந்து நடைக்கூத்து, பிரபந்தங்கள் என்பவற்றை இயற்றி தமிழ் அன்னைக்கு மகத்தான பணியாற்றியவர்.

இவரது அரங்கப் படையல் என்ற நாடக நூல் 2007ஆம் ஆண்டு இலங்கை இலக்கிய பெருமன்றத்தின் முதல் பரிசைப் பெற்றுக் கொண்டது.

இதேபோல் கோலங்கள் ஐந்து நாடக நூலும் யாழ். இலக்கிய வட்டத்தின் முதல் பரிசைப் பெற்றுக் கொண்டது.

இவருக்கு கலாபூசணம், கலைஞான கேசரி, சிவநெறிப்புலவர், சைவப்புலவர் மணி, முதலமைச்சர் விருது, கலைச்சுடர் போன்ற பல பட்டங்களை பொது அமைப்புக்கள் வழங்கிக் கௌரவித்தன.

இவர் நீண்ட காலமாகப் புகழ்பூத்த அதிபராக இருந்த இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய சமூகத்தினர் ஐயாவின் நினைவாக “சைவப்புலவர் சு. செல்லத்துரை அறக்கட்டளை நிதியம்” என்ற ஒன்றை உருவாக்கிப் போட்டிகளை நடத்தி ஐயாவின் நினைவு நாளில் பரிசளிப்பு விழாவையும் நடத்தி வருகின்றனர்.

ஐயாவின் நினைவு தினத்தில் குருவின் பாதங்களை வணங்கி அவர் காட்டிய வழியில் செயற்பட்டு அவரின் ஆசிர்வாதத்துடன் அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தை முன்னிறுத்தி சேவை செய்வோம் என உறுதிபூணுகிறோம்.

**சைவப்புலவர்**
**சி.கா.கமலநாதன்,**
**தலைவர், அகில இலங்கை**
**சைவப்புலவர் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**



# புதிய மருத்துவ சேவை அதிகாரி கல்முனைக்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது டாக்டர் ஸைகிலா இஸ்ஸடீன் கல்முனை பிராந்திய மருத்துவ சேவைகள் அதிகாரியாக கடமையேற்றுக் கொண்டார்.

இவரே முதலாவது பெண், கல்முனை பிராந்திய மருத்துவ சேவைகள் அதிகாரியாக கடமையேற்றவர்.

மருத்துவ துறையில் 35 வருட சேவைக் காலத்தை கொண்ட இவர் சாய்ந்தமருதின் முதலாவது பெண் எம்.பி.பி.எஸ். மருத்துவ கலாநிதியும், மருத்துவ நிர்வாகத்துறையில் முதலாவது முஸ்லிம் பெண் நிர்வாக உத்தியோகத்தரும் ஆவார்.

சாய்ந்தமருது வைத்தியசாலை, சாய்ந்தமருது மருத்துவ சுகாதார அதிகாரி, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் தள வைத்தியசாலை ஆகியவற்றில் கடமையாற்றியவர்.

# கல்முனையில் வறுமை ஒழிப்பு நிகழ்வு





(பாறுக் ஷிஹான்)

கல்முனைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ்வரும் மருதமுனை மற்றும் கல்முனைக்குடி சமுர்த்தி வங்கியில் வறுமை ஒழிப்பு வாரத்துக்கான இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம் .சாலிஹ் தலைமையில் இடம்பெற்றன.

இதில் வீடுகள் கையளிப்பு, அடிக்கல் நாட்டும் நிகழ்வு, மரம் நடுகை நிகழ்வுகள் மற்றும் வாழ்வாதாரக் கடன் வழங்கி வைக்கும் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன் போது பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். விசேட அதிதியாக பிரதேச செயலகக் கணக்காளர் கே.எம்.எஸ். அமீர் அலி, கௌரவ அதிதிகளாக மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் என்.எம் நௌஸாத் , வங்கி முகாமையாளர்களான எஸ்.எஸ். பரீரா , யு.கே.சிறாஜ் , திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா, சமுர்த்தி வலய உதவி முகாமையாளர்களான ஐ.எல். அர்சுத்தீன், பி.எம். இசாக், வங்கி உதவி முகாமையாளர் எஸ்.எஸ். றிபாயா, மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தி யோகத்தர்களும் சமுர்த்தி சமுதாய அமைப்பின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# கிழக்குப் பல்கலை மாணவி தூக்கில் சடலமாக மீட்பு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி, நொச்சிமுனை பகுதியிலுள்ள வீடொன்றில் தங்கியிருந்து பல்கலைக்கழக கல்வியை தொடர்ந்து வந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியா ழக்கிழமை (19) காலை இடம்பெற்றுள்ளது.

கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 2 ஆம் வருடத்தில் கல்வியைத் தொடர்ந்து வந்த 22 வயதான மாணவியே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

இவர் மட்டக்களப்பு பழுகாமம் பகுதியை பூர்வீகமாகக் கொண்டவர். கண்டிபெள பகுதியில் குடும்பத்துடன் வசித்து வந்தவர். பல்கலைக் கழகக் கல்வியை நொச்சிமுனையிலுள்ள சித்தியின் வீட்டில் தங்கியிருந்து கற்று வந்துள்ளார்.



# வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொத்துவில் பிரதேசத்தில் உதவிகள்

(எம்.ஏ.றமீஸ்)

பொத்துவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கபப்ட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்று (19) பொத்துவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் அனுசரணையில் பொத்துவில் பிரதேச செயலகத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட குடும்பத்தவர்களுக்கு இவ்வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி பிர்னாஸ் இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் நூறு குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டது.

கடந்த காலத்தில் நிலவிய வறட்சியுடனான காலநிலையின்போது பாதிக்கப்பட்ட குடும்பவத்தவர்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களுக்கென பத்தாயிரம் ரூபா பெறுமதியான அத்தியவசிய பொருள்கள் அடங்கிய உலருணவுப் பொதிகள் இதன்போது வழங்கப்பட்டன.




குடிதண்ணீரைச் சேமித்து வைக்கும் இரண்டாயிரம் லீற்றர் கொள்ளவுடைய 10 தண்ணீர் தாங்கிகள், குடி தண்ணீர் சேமிக்கும் சிறிய ரக தண்ணீர் கலன்கள் உள்ளிட்ட உதவிப் பொருட்களும் இதன்போது வழங்கப்பட்டன.

பொத்துவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆத்திமுனை, செங்காமம், கோமாரி ஆகிய பகுதிகளில் வசித்து வரும் விதவைகள், விஷேட தேவையுடையோர், முதியோர் மற்றும் வருமானம் குறைந்த குடும்பத்தவர்கள் போன்றோருக்கும் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.


இந்நிகழ்வின்போது ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட பிரதானி எம்.எஸ்.சமிந்த டி சில்வா, நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கேணல் டி.எல். சரத் சாந்த, கிழக்கு மாகாண நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் தாறுக்க தனஞ்சய பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சந்திப்பு...

(அஸ்ஹர ஆதம்)

முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம்.பௌஸி றிஷாத் பதியுதீன் மற்றும் எம்.எச்.எம்.ஹலீம் ஆகியோர் அடங்கிய குழுவொன்று நேற்று பாலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் எம்.எச். தார் ஸயீதை சந்தித்து பலஸ்தீனத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கள நிலவரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

காஸாவில் பொது மக்கள் எதிர்கொள்ளும் உயிர் இழப்புகள் மற்றும் கடுமையான நெருக்கடிகளுக்கு வருத்தத்தையும் தெரிவித்தனர்.





## வறுமை ஒழிப்பு வாரத்தில் வாழை மரங்கள் நடுகை!

(எம்.எப்.நவாஸ்)

வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலர் ரீ.எம்.எம்.அன்சார் தலைமையில் வாழை நடுகை நேற்று இடம்பெற்றது .

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் றாசித் யஹியா் தலைமைபீட முகாமையாளர் எம். ஜே.எம். நிஃமத்துள்ளாஹ், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.சீ.எம்.தஸ்லீம், கருத்திட்ட முகாமையாளர் என். ரீ.மசூர் மற்றும் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# நலத் திட்டம் தொடர்பில் ஆராய்வு

(அஸ்ஹர் ஆதம்)

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கல்முனை, சாய்ந்தமருது மாளிகைக்காடு ஆகிய கிளைகளின் உறுப்பினர்களுக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று ஜம்இய்யாவின் கல்முனை கிளை அலுவலகத்தில் இடம் பெற்றது.

இச்சந்திப்பில் கல்முனை, சாய்ந்த மருது பிரதேசங்களில் கல்வி , கலாச்சார விழுமியங்களின் வளர்ச்சி போன்ற விடயங்களை முன்னிறுத்தி ஜம்இய்யாவின் கல்முனை,சாய்ந்தமருது கிளைகளும் ஒன்றிணைந்து எவ்வாறு செயற்படுவது என்பது குறித்தும், எதிர்கால நலத்திட்டங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.



# வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சமுர்த்தி வங்கியால் கணக்குகள் திறப்பு

(சப்னா றிபாஸ், நூருல் ஹுதா உமர், எம்.ஏ.ஏ.அக்தார்)

வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இறக்காமம் சமுர்த்தி வங்கியால் சேமிப்பு மற்றும் கணக்கு திறக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு பாஸ் புத்தகங்களும் வழங்கப்பட்டன.

இறக்காமம் சமூர்த்தி வங்கி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலைமைப்பீட முகமையாளர், முகாமைத்துவ பணிப்பாளர், வங்கி முகாமையாளர், வலய மற்றும் வங்கி உதவி முகாமையாளர்கள், மற்றும் பிரிவுகளில் கடமையாற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# சாய்ந்தமருதில் வீடுகள் கையளிப்பு

(அஸ்ஹர் ஆதம் )

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சௌபாக்கியா வீடமைப்பு விசேட வீட்டுத் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கான 05 வீடுகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு சாய்ந்தமருதில் நேற்று (18) நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல்.ஜஃபரின் ஏற்பாட்டிலும், சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீமின் தலைமையிலும் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வீட்டை உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.

இதில் அதிதிகளாக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ மஜீத், பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் , கிராம மட்ட சமுர்த்தி அமைப்புக்களின் தலைவர்கள், பொது மக்கள் கலந்துகொண்டனர்.

# நோயாளர் பராமரிப்பு தொடர்பில் செயலமர்வு

(அஸ்ஹர்இப்றாஹிம்)

வீடுகளில் நிரந்தர நோயாளிகளாக உள்ளவர்களை பராமரிப்பவர்களுக்கான பயிற்சி நெறியும் செயலமர்வும் ஏறாவூர் கிழக்கு புற்றுநோய் பராமரிப்பு நிலையத்தில் இடம்பெற்றன.

நிதந்தர நோயாளிகளாக காணப்படும் வயோதிபர்கள், மாற்று ஆற்றல் படைத்தவர்கள், விபத்துகளின் போது அங்கவீனமானவர்கள், சுயமாக இயங்க முடியாத நிலையிலுள்ளவர்கள் போன்றோரை பராமரிப்பது தொடர்பாக இதன்போது பயிற்சி நெறிகள் வழங்கபப்ட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியர்கள், சிரேஷ்ட தாதியர்கள், முதலுதவியாளர்கள், மருந்தியலாளர்கள் மற்றும் வளவாளர்கள் கலந்து கொண்டனர்.





# கோணாவத்தை ஆறு துப்புரவுக்கு முதற்கட்டமாக 2 மில்லியன் ரூபா

(கே. எ. ஹமீட் )

அட்டாளைச்சேனை சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றைத் துப்புரவு செய்வதற்கு முதற்கட்டமாக நீர்ப்பாசன அமைச்சர் ரொஸான் ரணசிங்கவின் பணிப்புரையின் படி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் அஜீத் 2 மில்லியன் நிதியை வழங்கியுள்ளார்.

அண்மையில் நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜீத்தை கிழக்கு மாகாண முன்னாள் வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை சந்தித்தார்.

இந்நிகழ்வில் அக்கறைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் ஆகில் அகமட்டும் கலந்து கொண்டார்.

# வீடு புனரமைத்து திறந்துவைப்பு

(எம் எப். நவாஸ்)

ஜயவிமன வீட்டு திட்டத்தின்கீழ் அட்டாளைச்சேனை 12 ஆம் பிரிவில் சமுர்த்தி பயனாளி ஒருவரின் வீட்டை புனரமைப்புச் செய்து திறந்து வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம் .ஏ. சி. அகமது ஷாபீர் தலைமையில் நேற்று (19) இடம் பெற்றது.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் கே பி. சலீம், தலைமை முகாமையாளர் ஏ எம். ஹமீத், முகாமையாளர்களான ரீ. பரமானந்தம், ஐயூ. நபீஷா, கிராம உத்தியோகத்தர் எம். ஐ. எம். அஸ்வர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. ஜே. எம். அனிஸ் மற்றும் ஏ. எஸ். எம். உனைஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# 41 தூதரக அதிகாரிகளை மீள அழைத்தது கனடா!




காலிஸ்தான் குழு தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையில் சர்ச்சை நீடிக்கின்றது.

இந்த நிலையில், இந்தியாவில் பணியாற்றி வந்த 41 தூதரக அதிகாரிகளை கனடா மீள அழைத்துள்ளது. இந்தியா விதித்த காலக்கெடு முடிவடைந்த நிலையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது குறித்து கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி கூறுகையில், தங்கள் நாட்டில் உள்ள எங்களின் தூதரக அதிகாரிகளை வெளியேற்ற வேண்டும் என்றும் அவ்வாறு வெளியேற்றப்படாத அதிகாரி களின் பொறுப்புகள் நீக்கப்படும் என்றும் ஒருதலைபட்சமாக இந்தியா கூறியிருந்தது.

இந்த முடிவு உரிய காரணம் இல்லாதது, முன்னெப்போதும் நிகழ்ந்திராதது, தூதரக அதிகார உறவுகள் குறித்த வியன்னா மாநாட்டு ஒப்பந்தத்தை மீறிய செயலாகும். தூதரக அதிகார விவகாரங்களின் விதிகளை உடைக்க நாம் அனுமதித்தால், இந்த கிரகத்தில் எந்த ஓர் இடத்திலும் எந்த தூதரக அதிகாரியும் பாதுகாப்பாக இருக்க முடியாது. இந்த காரணத்துக்காக நாங்கள் இந்தியாவுக்கு எந்த பதிலடியும் கொடுக்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கடனாவின் 41 தூதரக அதிகாரிகளும், 42 உதவியாளர்களும் பணியாற்றி வந்தனர். இந்த நிலையில், அவர்கள் அனைவருமே மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் கடந்த 1980 -1990 ஆம் ஆண்டுகள் காலகட்டத்தில் பல்வேறு பிரிவினைவாத அமைப்புகள் தலைதூக்கின. காலிஸ்தான் பெயரில் தனி நாடு கோரி அந்த அமைப்புகள் தேசவிரோத செயல்களில் ஈடுபட்டன. மத்திய, மாநில அரசுகளின் தீவிர நடவடிக்கைகளால் பிரிவினைவாத அமைப்புகள் ஒடுக்கப்பட்டன. இதனால், அந்த அமைப்புகளை சேர்ந்த பலரும் கனடாவுக்கு தப்பினர். அவர்களுக்கு அந்த நாட்டு அரசு குடியுரிமை வழங்கியது.

இந்தச் சூழலில், பாகிஸ்தானின் ஐ.எஸ். ஐ. உளவு அமைப்பின் தூண்டுதலால் கனடாவை சேர்ந்த சில சீக்கியர்கள் சமீபகாலமாக மீண்டும் காலிஸ்தான் கோரிக்கையை எழுப்பிவரு கின்றனர். காலிஸ்தான் பிரிவினை வாதிகளுக்கு ஐ.எஸ்.ஐ. அமைப்பும் தாராளமாக நிதியுதவி, ஆயுதங்களை வழங்கி வருகிறது.

அந்த வகையில், இந்தியாவில் இருந்து கனடாவில் குடியேறிய ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்பவர், 'காலிஸ்தான் டைகர் ஃபோர்ஸ்' என்ற அமைப்பின் தலைவராக இருந்து, இந்தியாவுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வந்தார். அவரை தேடப்படும் தீவிரவாதியாக இந்திய அரசு கடந்த 2022 இல் அறிவித்தது. அவரை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு பலமுறை வலியுறுத்தியும், கனடா அரசு ஏற்கவில்லை.

இந்த நிலையில், கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம், சர்ரே நகரில் உள்ள குருத்வாரா வளாகத்தில் மர்ம நபர்களால் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜுன் 18 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதன் பின்னணியில் இந்திய அரசு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டினார். இதை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது.

இந்த விவகாரத்தால் இரு நாடுகள் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. நிஜ்ஜார் கொலையில் தொடர்பு இருப்பதாக கனடாவில் பணியாற்றிய இந்திய தூதரக அதிகாரி ஒருவர் உடனடியாக வெளியேற்றப்பட்டார். இதற்கு பதிலடியாக, இந்தியாவில் பணியாற்றிய கனடா தூதரக மூத்த அதிகாரி அந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

இதன் தொடர்ச்சியாக, இந்தியாவில் பணியாற்றும் 41 கனடா தூதரக அதிகாரிகளை திரும்ப பெறவேண்டும் அந்த நாட்டு அரசிடம் இந்திய அரசு வலியுறுத்தி உள்ளது. ஒக்டோபர் 10 ஆம் திகதிக்குள் அவர்கள் வெளியேற வேண்டும். அதன் பிறகு அவர்களது தூதரக பாதுகாப்பு உரிமை பறிக்கப்படும் என்று மத்திய அரசு சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மேல்மருவத்தூரில் பங்காரு அடிகளாருக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அஞ்சலி!



மேல்மருத்துவர் கோயில் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் நிறுவனரான ஆன்மிக குரு பங்காரு அடிகளாரின் உடலுக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்து வருகின்றனர்.

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தின் நிறுவனரான ஆன்மிக குரு பங்காரு அடிகளார் நேற்று காலமானார். அவருக்கு வயது 82. அடிகளாரின் மறைவு, அவரது பக்தர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேல்மருவத்தூரில் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தை கடந்த 1970 ஆம் ஆண்டு நிறுவினார். கோயில் கருவறைக்கே சென்று பெண்கள் நேரடியாக வழிபாடு செய்யும் முறையை ஏற்படுத்தினார். மாதவிலக்கு நாட்களிலும் இங்கு தடையின்றி வழிபடலாம் என்பது, பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. பக்தர்களால் 'அம்மா' என்று மிகுந்த அன்போடு பங்காரு அடிகளார் அழைக்கப்பட்டார் .

இந்த நிலையில், கடந்த சிலநாட்களாக வயது மூப்பு காரணமாக உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் பங்காரு அடிகளார் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். நேற்று காலை உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டதால் ஆதிபராசக்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பிற்பகலில் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்ட பங்காரு அடிகளார் மாலை 5 மணி அளவில் காலமானார்.

# வடகொரிய ஏவுகணைகளை பயன்படுத்துகிறது ஹமாஸ்!



பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினர் வடகொரியாவின் எப் – 7 ஏவுகணைகளை பயன்படுத்தி வருவது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவலில், வடகொரிய இராணுவத்தில் எப் 7 ரக ஏவுகணைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த ஏவுகணைகள் வடகொரியாவில் இருந்து ஈரானுக்கு கடத்தப்படுகின்றன. அங்கிருந்து ஹமாஸ் அமைப்பினருக்கு ஏவுகணைகள் விநியோகம் செய்யப்பட்டு உள்ளன.



தற்போதைய போரில் வடகொரிய இராணுவத்தின் எப் -7 ரக ஏவுகணைகளை ஹமாஸ் அமைப்பினர் அதிகமாக பயன்படுத்தி வருகின்றனர். இஸ்ரேல் பகுதிகளில் விழுந்த ஏவுகணைகளை ஆய்வு செய்தபோது, அவை எப் 7 ஏவுகணைகள் என்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது. வடகொரியாவின் பீரங்கிகளை தாக்கி அழிக்கும் பீனிக்ஸ் ஏவுகணைகளும் ஹமாஸ் வசம் இருக்கக்கூடும் என்று சந்தேகிக்கிறோம்.

போர் தீவிரமடைந்து வரும் நிலையில் ஹமாஸ் அமைப்பினரிடம் ஆயுதங்களின் கையிருப்பு குறைந்து வருகிறது. இப்போதைய நிலையில் அவர்களிடம் சுமார் 1,000 ஏவுகணைகள் மட்டுமே இருக்கக்கூடும்.

அந்த அமைப் புக்கான ஆயுத விநியோக சங்கிலி முழுமையாக துண்டிக்கப்பட்டு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காசாவில் தேவாலய வளாகத்தில் இஸ்ரேல் தாக்குதல்; பலர் உயிரிழப்பு



காசாவில் உள்ள பழமையான தேவாலய வளாகத்தில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

காசா பகுதியில் உள்ள தேவாலய வளாகத்தில் தஞ்சம் புகுந்த பல இடம்பெயர்ந்த மக்கள், இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிரேக்க ஆர்த்தடாக்ஸ் தேவாலயத்தின் வளாகத்தில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என அந்த அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பாலஸ்தீன பகுதியில் போர் பதற்றம் நிலவி வருபதால், காசா பகுதியைச் சேர்ந்த சில மக்கள் தஞ்சம் புகுந்திருந்த வழிபாட்டுத் தலத்திற்கு அருகில் உள்ள இடங்களை குறிவைத்து இந்த தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்களில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இஸ்ரேலிய இராணுவம் தரப்பில் உறுதியான தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.